# கனிமொழி எம்.பி., இன்னசென்ட் திவ்யா ஐ.ஏ.எஸ். உள்ளிட்ட 11 சாதனை பெண்களுக்கு 'சக்தி மசாலா' விருது

## நிறுவனர் துரைசாமி — சாந்தி துரைசாமி வழங்கினார்கள்



சென்னை, ஆக.12–

சென்னை சேத்துப்பட்டில், சக்தி மசாலா மற்றும் பிராண்ட் அவதார் வழங்கும் சுயசக்தி விருதுகள்– 2024 நிகழ்ச்சி நடந்தது. விவசாயம், சமூக நலன், கல்வி, கலை, சுகாதாரம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் பெண்கள் 12 பேருக்கும், பொது வாழ்க்கையில் ஒரு பகுதியாக சிறந்து விளங்கும் கனிமொழி எம்.பி., ஐ.ஏ.எஸ். அதிகாரி இன்னசென்ட் திவ்யா உட்பட முக்கிய பெண் ஆளுமைகள் 11 பேருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

'சக்தி மசாலா' நிறுவனர் பி.சி. துரைசாமி, டாக்டர் சாந்தி துரைசாமி இருவரும் இணைந்து கனிமொழி எம்.பி.,க்கு விருது வழங்கினர். திரையில் இடம்பெற்ற புகைப்படங்கள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு, கனிமொழி எம்.பி. பதிலளித்து பேசினார்.

''தமிழகத்திற்கு தேவையான நிதியை வழங்கினால், மிகவும் பாராட்டுக்கு தகுந்தவர் பிரதமர் மோடி. முதல்வர் ஸ்டாலின், எனக்கு பாசமான அண்ணன். மறைந்த முதல்வரும், என் தந்தையுமான கருணாநிதி, நான் இரவில் பயணம் செய்வதை விரும்பமாட்டார். அப்படி பயணம் செய்தால், அதற்காக கோபம் கொள்வார்.

நடிகர் விஜய் அவரது துறையில், உழைப்பு, தெளிந்த பார்வையால் உயரத்தை எட்ட முடிந்துள்ளது. அதே தெளிவோடும், உழைப்போடும், தொடர்ந்து பயணிக்க வேண்டும்'' என்று தன் கருத்துக்களை வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் பிராண்ட் அவதாரின் சுயசக்தி விருதுகள் தலைமை நிர்வாக அதிகாரி ஹேமச்சந்திரன், சிறந்த பெண் சாதனையாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




# 'தமிழ்ப் புதல்வன்' திட்டத்தின் கீழ் ஸ்ரீசந்திரபிரபு ஜெயின் கல்லூரி மாணவர்களுக்கு மாதம் ரூ.1000

திருவள்ளூர், ஆக. 12–

**திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர், ஸ்ரீசந்திரபிரபு ஜெயின் கல்லூரியில் தமிழக அரசின் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் தேர்வான மாணவர்களுக்கு வங்கிக் கணக்குப் பற்று அட்டை வழங்கும் விழா பகவான் மகான் கலையரங்கில் கணிதவியல் துறைத்தலைவர் முத்துக்குமார்தொடங்கிவைத்து வரவேற்புரையை வழங்கினார்.**

கல்லூரி செயலாளர் லலித்குமார் ஓ.ஜெயின், கல்லூரி பொறுப்பு முதல்வர் நா. சுஜாதா முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினர்களாக மீஞ்சூர் பேரூராட்சி தலைவர் ருக்மணி மோகன்ராஜ், வார்டு உறுப்பினர் அபுபக்கர் ஆகியோருக்கு பொன்னாடைப் போர்த்தி நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

தமிழ்ப் புதல்வன் திட்டம் கோவையில் முதலமைச்சர் தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்வு மாணவர்களுக்கு விழா அரங்கில் அமைக்கப்பட்ட இரண்டு பெரிய காணொளித் திரைகளில் நேரடிக் காட்சியாக காண்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கணிதவியல் துறைத்தலைவர் எஸ்.முத்துக்குமார் சிறப்பு விருந்தினரை விழா அரங்கிற்கு அறிமுகம் செய்து வைத்தார். சிறப்பு விருந்தினர் அபுபக்கர் உரையாற்றும் பொழுது, மாணவர்கள் கடின உழைப்பின் மூலம் சாதனையாளர்களாக உயரலாம். புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியாரின் சிந்தனைகள் எளிய மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படைகளாக அமைந்தன. அத்தகைய சிந்தனைகள் மனதில் கொண்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காலை உணவுத திட்டம் பள்ளிக் குழந்தைகளுக்காகவும், புதுமைப் பெண் திட்டம் உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்காகவும் கொண்டு வந்தார்.

அதன் தொடர்ச்சியாக உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டத்தினைக் கொண்டு வந்துள்ளார். இத்திட்டத்தின் மூலம் உயர்கல்வி பயிலும் வரை மாதம் தவறாமல் ஒவ்வொரு மாணவரின் வங்கிக் கணக்கிலும் ரூ. 1000 வரவு வைக்கப்படும். இப்பணத்தை வைத்து நீங்கள் அரசு அதிகாரிகளாக உருவாக்கும் போட்டித் தேர்வு எதிர்நோக்கிய பயிற்சியில் ஈடுபடவேண்டும். அதிகாரத்திற்கு வரவேண்டும். அதிகாரத்திற்கு வந்தால்தான் எண்ணற்ற எளியோர்களுக்கு உதவ முடியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### ருக்மணி மோகன்ராஜ்

ருக்மணி மோகன்ராஜ் பேசுகையில், தமிழ்ப் புதல்வன் திட்டமானது எதிர்காலத்தில் நாட்டினை வழிநடத்தப்போகும் இளைஞர்களான உங்களுக்கானது. இத்திட்டத்தின் மூலம் பெறும் பணத்தை கல்வி முன்னேற்றத்திற்காகவே பொறுப்புணர்ந்து பயன்படுத்த வேண்டும். பெற்றோர் உள்ளிட்ட அனைவரையும் மதிக்க வேண்டும். மத்திய மாநிலப் பணியாளர் தேர்வாணையங்கள் நடத்தும் போட்டித் தேர்வுத் தொடர்பான பயிற்சிபெற தமிழக அரசின் பல்வேறு திட்டங்களும், மானியங்களும், ஊக்கத் தொகைகளும் வழங்கப்படுகின்றன. அவற்றை மாணவர்களாகிய நீங்கள் கண்டறிந்து பயன்பெற வேண்டும் என கூறினார்.

தொடர்ந்து தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 209 மாணவர்களுக்கு வங்கிப் பற்றட்டை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ்துறைத் தலைவர் மு.பிரபு நன்றி கூறினார்.

## தமிழ் சினிமா மூத்த எழுத்தாளர்கள்

# காரைக்குடி நாராயணன், வி.என். சம்பந்தம், கவிஞர் பூவை செங்குட்டுவனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது; ரூ.5,000 நிதி உதவி

## பட அதிபர் திரிசக்தி சுந்தரராமன் வழங்கினார்



சென்னை, ஆக 12–

**தென்னிந்திய திரைப்பட எழுத்தாளர்கள் அறக்கட்டளையின் 15 ஆம் ஆண்டு துவக்க விழா சேப்பாக்கம் ஓமந்துராரா் அரசினர் தோட்டத்தில் உள்ள பத்திரிக்கையாளர் மன்றத்தில் நடைபெற்றது.**

மறைந்த இயக்குனர் விசு, கவிஞர் பிறைசூடன் இருவருக்கும் நினைவாஞ்சலி செலுத்தப்பட்டது. மூத்த எழுத்தாளர் சோலை ராஜேந்திரன் வரவேற்புரை ஆற்றினார். அறக்கட்டளையின் தலைவரும், திரிசக்தி குழுமத்தின் தலைவருமான 'செவாலியே' சுந்தரராமன் தலைமை உரையாற்றினார். அறக்கட்டளை உருவான விதம், அது கடந்த வந்த பாதை, எதிர்காலத் திட்டங்கள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். எழுத்தாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் பொறுப்பில் விருது பெறுபவர்கள் இருப்பதால், சங்கப் பணத்தை எடுத்து அவர்களே வழங்கிக் கொண்டார்கள் என்று பின்நாளில் யாரும் குறை சொல்லி விடக்கூடாதே என்பதற்காக, அறக்கட்டளை சார்பில் தன் சொந்தப் பணத்தில் இந்த ஆண்டு ரொக்கப் பரிசை வழங்குவதாக திரிசக்தி சுந்தர்ராமன் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மூத்த திரைப்பட எழுத்தாளரும் இயக்குனருமான காரைக்குடி நாராயணன் வி.என். சம்பந்தம் மற்றும் மூத்த திரைப்பட பாடல் ஆசிரியர் பூவை செங்குட்டுவன் (திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் முருகா... பாடல் புகழ்) மூவருக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருதை வழங்கினார். அதோடு இம்மூன்று கலைஞர்களுக்கும் ரூ.5000 ரொக்கப்பரிசை வழங்கினார்.

திரிசக்தி சுந்தரராமனின் மகளும், தமிழ், தெலுங்கு இந்தி திரைப்பட இயக்குனருமான மதுமிதா நலிந்த 7 மாணவர்களுக்கு தலா ரூ.1000 கல்வி உதவித் தொகை வழங்கினார். இவர்கள் வியாசர்பாடி கன்னிகாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்தவர்கள்.

நிகழ்ச்சியில் திரைப்பட இயக்குனர் வி சி குகநாதன், நடிகர் எம் ஆர் ஆர் ராதா ரவி, மக்கள் குரல் வீ. ராம்ஜீ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று, வாழ்நாள் சாதனையாளர் மூன்று கலைஞர்களையும் வாழ்த்திப் பேசினார்கள்.

முடிவில் அறக்கட்டளை உறுப்பினரும், வழக்கறிஞருமான சீனிவாச ராவ் நன்றி கூறினார். மயிலை குமார் தொகுத்து வழங்கினார். தீனதயாள் மற்ற உறுப்பினர்கள் விழா ஒருங்கிணைப்பாளர்களாக இருந்து ஏற்பாடுகளை செய்திருந்தார்கள்.

நிகழ்ச்சியில் திரிசக்தி சுந்தர்ராமனின் துணைவியார் நளினி சுந்தர்ராமன், பிரபல படத் தயாரிப்பாளர் கே.டி. குஞ்சுமோன், விசு குடும்பத்திலிருந்து அவரது மைத்துனர் – நடிகர் குரியாகோஸ் ரங்கா, பிறைசூடனின் மகன், பூவை செங்குட்டுவனின் மகன் பூவை தயாளன், பத்திரிகையாளர் கீதப்பிரியன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றார்கள்.

# நாளை காஞ்சிபுரம், செங்கல்பட்டில் ரெப்கோ வீட்டு கடன் முகாம்

சென்னை, ஆக.12–

நாளை 13–ந் தேதி முதல் நாளை மறுநாள் 14–ந் தேதி வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை ரெப்கோ சிறப்பு வீட்டு வசதி கடன் முகாம் காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு கிளைகளில் நடத்துகிறது. குறைந்த வட்டி விகிதம் மற்றும் பல்வேறு திட்டங்கள் குறித்து விளக்கப்படும். பொதுமக்கள் இந்த சிறப்பு கடன் முகாமினை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.




# சென்னை பெட்ரோலியம் சுத்திகரிப்பில் சாதனை: இதுவரை இல்லாத அளவில் 550% டிவிடெண்ட்

சென்னை, ஆக. 12–

**சென்னை பெட்ரோலியம் நிறுவனம் இதுவரை எந்த ஆண்டிலும் இல்லாத அளவில் இதன் பங்குதாரர்களுக்கு 550% டிவிடெண்ட் வழங்குகிறது. இதன் மூலம் ஒரு பங்குக்கு ரூ.55 வீதம் டிவிடெண்ட் தொகை வழங்கப்படுகிறது என்று சென்னை பெட்ரோலியம் சேர்மனும் இந்தியன் ஆயில் தலைவருமான எஸ்.எம் வைத்தியா தெரிவித்தார்.**

இந்தியன் ஆயில் அங்கமாக திகழும் சென்னை பெட்ரோலியம் நிறுவனம் 58–வது வருடாந்திர பேரவை கூட்டம் ஆன்லைனில் நடைபெற்ற போது இதன் சேர்மன் வைத்தியா பங்குதாரர்களிடையே பேசினார். சென்னை பெட்ரோலியம் இதுவரை எந்த ஆண்டிலும் இல்லாத வகையில் ஒரே ஆண்டில் 11.6 மில்லியன் டன் கச்சா எண்ணெய் சுத்திகரித்துள்ளது என்றார் அவர்.

சென்னை பெட்ரோலியம் ரூ.79 ஆயிரத்து 207 கோடி ரூபாய் வர்த்தகம். இதன் மொத்த லாபம் ரூ.3,660 கோடி ஆகும். நிகர லாபம் ரூ.2711 கோடியாக உயர்ந்துள்ளதுஎன்றார் அவர்.

சென்னை பெட்ரோலியம் இதன் முதலீடு கம்பெனியான இந்தியன் ஆயில் நிறுவனத்திற்கு டிவிடெண்ட் செக்காக ரூ.2711 கோடியை வழங்குகிறது.

இதற்கான டிவிடெண்ட் காசோலையை சென்னை பெட்ரோலியம் தொழில்நுட்ப டைரக்டரும் மற்றும் நிர்வாக இயக்குனருமான ஹெச்.சங்கர், இந்தியன் ஆயில் சேர்மன் எஸ்.எம். வைத்தியாவிடம் வழங்கினார்.

சென்னை பெட்ரோலியத்தின் நிதித்துறை டைரக்டர் ரோஹித் குமார் அகர்வாலா, செயல்பாடுகள் பிரிவு டைரக்டர் பி.கண்ணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

### பெயர் மாற்றம்

Brithiviraj Baskar, பிறந்த தேதி: 05.06.1987, 9/23A, சாந்தி நகர், கொரட்டூர் சென்னை – 600 080 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Brithiviraj Meenakshisundaram Baskar** என்று அழைக்கப்படுகிறேன்.

Brithiviraj Baskar

### ENROLLMENT NOTICE

After 10days of the publication of this notice and within three months there after I, K.ABISHEK, S/o ,M.KUMAR,aged about 23 years, permanently residing at no :19, Ambedkar street, Ambedkar nagar, Mangalampet and post,Virudhachalam taluk,Cuddalore district - 606 104 .intended having my enrollment as an advocate moved before the bar council of Tamil Nadu,bar council building, High court campus Chennai_ 600 104.
Those who have any valid objections may notify the same to the bar council within ten days.

**ABISHEK.K**

******

After 10days of the publication of this notice and within three months there after I, K.KEERTHANA, D/o M.KULANTHAI NATHAN, aged, 22years permanently residing at no; 2/19, Nathaikolli street, A.Gudalur, Ayandur post, Kandatchipuram Taluk, Villupuram district -605755.intended having my enrollment as an advocate moved before the bar council of tamilnadu,bar council building, high court campus chennai-600104.
Those who have any valid objections may notify the same to the bar council within ten days.

**K.KEERTHANA.**

******

After 10 days of the publication of this notice and within three months there after. I, MAHALAKSHMI .A , D/o Anandhan ,aged 22 years, permanently residing at No.1/94, perumal Kovil Street, Athiyur thirukkai,Kanai Post,vikkiravaandi Taluk, Villupuram District, Tamil Nadu 605 701. Intended having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Building, High Court Campus, Chennai-600104.
Those who have any valid objections may notify the same to the Bar Council within ten days

**MAHALAKSHMI.A**

******

After 10 days of the publication of this notice and within THREE months thereafter. I, C. MANJULA, D/o Chandrasekaran, aged 27 years,permanently residing at No-3 ,North street,Keezhaiyur, Tirukkoilur, kallakurichi district-605 757 Intend having my enrolment as an advocate moved before the Bar Council of TamilNadu,Barcouncil buildings,High Court Campus, Chennai-104.
Those who have any valid Objections may Notify the same to the Bar Council within 10 days.

**C. MANJULA**

******

After 10 days of the publication of this notice and within THREE months thereafter. I, P.JEYA STELLA ,D/o S.PONNU DURAI ,aged 30 years,permanently residing at NO.2/64, NORTH STREET,VALLIYARKULAM, THIRUVIRUTHAN PULLI POST, TIRUNELVELI -627 414. Intend having my enrolment as an advocate moved before the Bar Council of TamilNadu, Barcouncil buildings, High Court Campus, Chennai-104.
Those who have any valid Objections may Notify the same to the Bar Council within 10 days.

**P.JEYA STELLA**

After ten days of the publication of this notice and within three months thereafter I, R.SRINUVASAN, S/o. C.Radhakrishnan aged 23 years, No. 6/8, Ganthi Nagar, Mailam Village & Post, Tindivanam Taluk, Villupuram District-604304 Intend having my enrollment as an Advocate moved before the Bar Council Of Tamil Nadu Bar Council Building, High Court Campus, Chennai - 600104.
Those who have any valid objections may notify the same to the Bar Council Within 10 days.

**R.SRINUVASAN**

******

After ten days of the publication of this notice and within THREE months thereafter. I, SUGANESH.E, S/o. ELANGOVAN Aged 29 years, Permanently residing at No.2/146(1), Kamarajar Street, Rishivandiyam Village & Post, Vanapuram Taluk, Kallakurichi District - 606205. intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-600 104.
Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**SUGANESH .E**


# விவ்ரிடி கேபிடல் லிமிடெட்

(முன்பு விவ்ரிடி கேபிடல் பிரைவேட் லிமிடெட் என அழைக்கப்பட்டது)

CIN-U65929TN2017PLC117196

பதிவு அலுவலகம் : பிரஸ்டீஜ் ஜக்ரியா மெட்ரோபாலிடன், எண்.200/1-8, 2வது தளம், பிளாக்-1, அண்ணா சாலை, சென்னை 600002.

**30 ஜூன் 2024 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனித்த நிதிநிலை முடிவுகள்**

[செபி (பட்டியலிடுதல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்), (எல்ஓடிஆர் ஒழுங்குமுறைகள்) விதிகள் 2015ன் விதி 52(8) மற்றும் 52(4)]

(₹ லட்சங்களில்)

| வ. எண் | விவரங்கள் | ஜூன் 30, 2024ல் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | ஜூன் 30, 2023ல் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது) |
|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 32,087.41 | 21,608.29 | 1,02,396.88 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி விலக்கு மற்றும் / அல்லது அசாதாரண அயிட்டங்கள் முன்) | 7,374.91 | 6,986.53 | 25,535.50 |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு மற்றும் / அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்) | 7,374.91 | 6,986.53 | 25,535.50 |
| 4. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு மற்றும் / அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்) | 5,516.85 | 5,186.31 | 19,125.95 |
| 5. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 5,562.88 | 5,022.31 | 19,639.33 |
| 6. | செலுத்தப்பட்ட ஈக்விடி பங்கு மூலதனம் | 1,774.41 | 1,708.72 | 1,766.21 |
| 7. | ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக) | 53,181.60 | 30,444.43 | 47,103.12 |
| 8. | பங்கு பிரீமியம் கணக்கு | 1,31,429.10 | 1,21,082.46 | 1,31,429.10 |
| 9. | நிகர மதிப்பு | 1,95,479.14 | 1,62,237.82 | 1,89,392.45 |
| 10. | செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை | 6,53,683.19 | 5,03,793.98 | 7,03,203.76 |
| 11. | நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள் | - | - | - |
| 12. | கடன் ஈக்விடி விகிதம் | 3.16 | 2.94 | 3.48 |
| 13. | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/-) (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகள்) | ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை | ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை | ஆண்டு விகிதம் செய்யப்பட்டது |
| | 1. அடிப்படை | 5.76 | 5.51 | 20.10 |
| | 2. டைலூட்டட் | 5.60 | 5.45 | 19.71 |
| 14. | மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | Nil | Nil | Nil |
| 15. | மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | Nil | Nil | Nil |
| 16. | கடன் சேவை கவரேஜ் விகிதம் | NA | NA | NA |
| 17. | வட்டி சேவை கவரேஜ் விகிதம் | NA | NA | NA |

குறிப்பு :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியலிடுதல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள 30 ஜூன் 2024ம் காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (URL: www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.vivriticapital.com) ஆகியவற்றில் கிடைக்கும்..
2. செபி (பட்டியலிடுதல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015, விதி 52(4)ன் தொடர்புடைய தகவல்கள் ஸ்டாக் எக்சேஞ்(பிஎஸ்இ)க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து (www.bseindia.com)ல் அணுகலாம்.

விவ்ரிடி கேபிடல் லிமிடெட்டுக்காக
(முன்பு விவ்ரிடி கேபிடல் பிரைவேட் லிமிடெட் என அழைக்கப்பட்டது)
ஒப்பம் / –
வினீத் சுகுமார்
நிர்வாக இயக்குனர்
DIN: 06848801

இடம் : சென்னை
தேதி : 08 ஆகஸ்டு 2024



# விவ்ரிடி அசெட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட்

(CIN - U65929TN2019PTC127644)

பதிவு அலுவலகம் : பிரஸ்டீஜ் ஜக்ரியா மெட்ரோபாலிடன், எண்.200/1-8, 1வது தளம், பிளாக்-1, அண்ணா சாலை, சென்னை 600002.

**ஜூன் 30, 2024 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனித்த நிதிநிலை முடிவுகள்**

[செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்), விதிகள் 2015ன் விதி 52(8) மற்றும் 52(4)]

(₹ லட்சங்களில்)

| வ. எண் | விவரங்கள் | ஜூன் 30, 2024ல் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | ஜூன் 30, 2023ல் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது) |
|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 1,411.97 | 1,147.31 | 4,819.24 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன்) | (168.18) | (112.66) | (269.98) |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | (168.18) | (112.66) | (269.98) |
| 4. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | (127.98) | (84.31) | (205.93) |
| 5. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | (133.98) | (86.00) | (217.51) |
| 6. | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 2,038.58 | 1,691.55 | 2,038.58 |
| 7. | நிலுவையில் உள்ள கட்டாயமாக மாற்றக்கூடிய முன்னுரிமை பங்குகள் | 992.95 | 992.95 | 992.95 |
| 8. | ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக) | (3,244.52) | (3,072.00) | (3,128.71) |
| 9. | பங்கு பிரீமியம் கணக்கு | 17,171.74 | 12,800.12 | 17,172.26 |
| 10. | நிகர மதிப்பு | 16,958.75 | 12,412.62 | 17,075.08 |
| 11. | செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை | 3,659.57 | 3,398.52 | 3,800.87 |
| 12. | நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள் | NA | NA | NA |
| 13. | கடன் பங்கு விகிதம் | 0.21 | 0.24 | 0.22 |
| 14. | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/-) (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகள்) | | | |
| | 1. அடிப்படை | (0.41) | (0.47) | (0.73) |
| | 2. டைலூட்டட் | (0.41) | (0.47) | (0.73) |
| 15. | மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | NA | NA | NA |
| 16. | மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | NA | NA | NA |
| 17. | கடன் சேவை கவரேஜ் விகிதம் | 0.13 | 0.43 | 0.09 |
| 18. | வட்டி சேவை கவரேஜ் விகிதம் | 0.02 | 0.22 | 1.03 |

குறிப்பு :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் பாம்பே ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (BSE: www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.vivritiamc.com) ஆகியவற்றில் கிடைக்கும்.
2. செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015, விதி 52(4)ன் தொடர்புடைய தகவல்கள் ஸ்டாக் எக்சேஞ்(பிஎஸ்இ)க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து (www.bseindia.com)ல் அணுகலாம்.

விவ்ரிடி அசெட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட்டுக்காக
ஒப்பம் / –
வினீத் சுகுமார்
நிர்வாக இயக்குனர்
DIN: 06848801

இடம் : சென்னை
தேதி : ஆகஸ்ட் 08, 2024